<u>தேதி:- 11.03.2020 அசல்வழக்கு எண்.148/2010 வா.சா.2 (சந்திரன்)</u>

<u>குறுக்குவிசாரணை:- (7, 13 முதல்15 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

வாசா.ஆ.38 ஐ என்ன காரணத்திற்காக தாக்கல் செய்கிறேன் என்பதை கூடுதல் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை. கூடுதல்நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் முதல்விசாரணையில் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது என்றும் வாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் என்பதால் அதை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.38 ல் உள்ள சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. அந்த ஆவணம் வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்பதால் தாக்கல் செய்துள்ளேன். வா.சாஆ.38 சொத்தும் பூர்வீகச் சொத்துதான். அந்த சொத்தில் பங்கு கேட்டு வாதிகள் வழக்கு தாக்கல் செய்யவில்லை. வா.சாஆ.38 சொத்து குறித்து 1 முதல்3 பிரதிவாதிகளும், அவர்களது தகப்பனாரான ஆறுமுகம்பிள்ளையும் நாகராஜன் மற்றும் சிலுவை ஆகியோருக்கு பொதுஅதிகாரப்பத்திரம் கொடுத்துவிட்டார்கள். அந்தப்பத்திரம் 09.11.2000 ம் தேதியிட்ட பத்திரமாகும். அந்த பொதுஅதிகாரம் பெற்ற நபர்கள் வா.சா.ஆ.38 சொத்தை விற்றுவிட்டார்கள். பொதுஅதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் கடைசி கிரையப்பத்திரம் எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.39 பொதுஅதிகாரம் தாவா 4 ஆம் லக்கச் சொத்திற்கு சம்பந்தப்பட்டது. வா.சா.ஆ.39 சொத்துக்களை 2000 க்கு பிறகு ஆறுமுகம்பிள்ளை நான்கு நபர்களுக்கு கிரையம் செய்துவிட்டார். மீதமுள்ள சொத்துக்கள் குறித்து தான் வா.சா.ஆ.39 அதிகாரம் துரைராஜ் என்பவருக்கு 1 ஆம் பிரதிவாதி மட்டும் எழுதிக் கொடுத்துள்ளார். தன் தகப்பனார் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் அதிகாரம் எழுதிக் கொடுத்ததாக 1 ஆம் பிரதிவாதி வா.சா.ஆ.39 ன் சொல்லியுள்ளார் அந்த உயில் 1 ஆம் பிரதிவாதியால் உற்பத்தி செய்யப்பட்டது. 12.10.2006 ல் ஆறுமுகம்பிள்ளை இறந்துவிட்டார். 31.07.2006 ல் உயில் எழுதப்பட்டதாக வா.சா.ஆ.39 ல் சொல்லப்பட்டுள்ளது. உயில் செல்லாது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.39 அடிப்படையில் துரைராஜ் சொத்தை யாருக்கு விற்றார் என்றால் எனக்குத் தெரியாது. உயிலைப்பற்றி வழக்குரையில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் எனக்குத் தெரியாது. நான் வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. சாட்சி மீண்டும் வழக்குரையை படித்துப் பார்த்தேன்

என்றால் ஆங்கிலத்தில் இருப்பதால் தமிழ் அர்த்தம் புரியவில்லைஎன்றும் மாற்றிக் கூறுகிறார். வழக்குரை அர்த்தம் தெரியாமல்தான் வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. அதனால் 4 ஆம் லக்கச் சொத்தை பொறுத்து வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 7 ஆம்பிரதிவாதி 19 ஆம்பிரதிவாதிக்கு கிரையம் செய்ததாக வா.சா.ஆ.40 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 27.01.1999 லேயே பாகப்பிரிவினை நடந்துவிட்டது என்றும், அதனடிப்படையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட தாவா 1 முதல் 3 லக்கச் சொத்துக்களையும், பிற சொத்துக்களையும் அவர்கள் விற்றுவிட்டார்கள் என்றும் அதை மறைத்து வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.45, 46 புகார்கள் வழக்கிற்கு பின்னிட்டு கொடுக்கப்பட்டவை என்றால் சரிதான். அதற்கு போலிசார் கொடுத்த புகார்மனு ஏற்பு இரசீதை தாக்கல் செய்யவில்லை. அவை இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 சட்டஅறிவிப்பில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் பார்த்தால்தான் தெரியும். அதனடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. வா.சா.ஆ.15 சட்டஅறிவிப்பில் மூன்று சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. மற்றச் சொத்துக்களும் உள்ளன. வழகது தாக்கல் செய்வதற்கு முன்பாக 11, 12 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது அவ்வாறு எந்த அறிவிப்பும் கொடுக்காமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.